இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - 2023/2024

மட்டம் - 05

# LLU5811/LWU3314– சுற்றாடல் சட்டம்

இறுதிப் பரீட்சை

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 20.05.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை - 07
ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. ஆரோக்கியமான சுற்றாடல் ஒன்றிற்கான உரிமையானது சர்வதேச சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமை ஒன்றாகும். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவானது சுற்றாடலிற்கான உரிமையை மனித உரிமை ஒன்றாக 2022 ஆம் ஆண்டு அங்கீகரித்தது. இச்சமகால உலகில் பல நாடுகள் சுற்றாடலுக்கான உரிமையை அடிப்படை உரிமையாக கொண்டுள்ளன அல்லது அதனை அரசியலமைப்பு சார் உரிமை ஒன்றாக ஏற்றுக்கொள்ள எண்ணுகின்றனர். இலங்கை உள்ளிட்ட தெற்காசிய நாடுகள் மீதான ஒரு ஆராய்வு ஆனது இந்நாடுகள் இன்றளவிலும் ஆரோக்கியமான சுற்றாடல் ஒன்றிற்கான உரிமையை பிற அரசியலமைப்பு சார் அடிப்படை உரிமைகள் மூலம் உறுதி செய்வதாக எடுத்துக்காட்டுகின்றது.

   இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? இதனை பொருத்தமான அரசியலமைப்பு உறுப்புரைகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் உள்ளடங்கிய சட்ட எடுத்துக்காட்டுகளுடன் நுணுக்கமாக ஆராய்க. உமது ஆராய்வானது இலங்கையின் நிலையையும் தெற்காசிய நாடுகளின் ஏதேனும் இரண்டின் (02) நிலைகளையும் உள்ளடக்க வேண்டும்.

   (25 புள்ளிகள்)

2. புமி என்பது ஒரு தீவு – நாடு ஆகும் என்பதுடன் அதன் புதிய அரசாங்கமானது நிலைபேண்தகு வலுசக்தி கொள்கையை நடைமுறைப்படுத்த உள்நாட்டு முதலீட்டாளர்களுடன் முதலீட்டு திட்டங்களில் கைச்சாத்திட தீர்மானிக்கிறது. இதற்கு இணங்க புமி "கிறீன் எனெர்ஜி லிமிட்டட்" (Green Energy Ltd) எனும் நிலைபேண்தகு வலுசக்தி தொடர்பில் பணியாற்றும் உள்நாட்டுக் கம்பனி ஒன்றிற்கு நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் பாரிய சூரிய வலுசக்திதகடுகளை (Maga solar panels) பொதிக்க புமி அனுமதி வழங்கியது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக நாட்டின் வடமத்திய பகுதியில் கிறீன் எனெர்ஜி லிமிட்டட் ஆனது ஒரு சூரிய வலுசக்தி தகட்டை பொதிக்க தீர்மானித்தது. எவ்வாறயினும் "கிறீன் ஸ் த கலர்" (Green is the color) எனும் நாட்டின் சுற்றாடல் சார் பேணுகை மற்றும் பாதுகாப்பு என்பன தொடர்பில் பணியாற்றும் ஒரு சிவில் சமூக தாபனம் இத்திட்டத்தின் தொடக்கம் தொடர்பான அறிவிப்பின் பின்னர் " சூரிய வலுசக்தியின் கறுப்புப் பக்கம்" (The dark side of solar energy power) எனப் பெயரிடப்பட்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இவ்வறிக்கையின் ஒரு பாகம் தெரிவிப்பதானது

"...சூரிய வலுச்சக்தி திட்டமானது பச்சை வீட்டு வாயுக்கள் (Green House gases) அல்லது வளி மாசு என்பனவற்றை ஏற்படுத்தாத காரணத்தினால் நிலைபேண்தகு சக்தியாக கருதப்படுகிறது." எவ்வாறாயினும் இது இத்திட்டத்தை செயற்படுத்த பாரிய நிலப்பரப்பு தேவைப்படுத்துகிறது. வடமத்திய மாகாணமானது நாட்டில் சனத்தொகை மிகுந்த இரண்டாவது மாகாணமாகும் என்பதுடன், இது குறிப்பாக யானைகள் போன்ற வனஜீவராசிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான மோதல்களைச் சந்தித்தது. இச்செயற்றிட்டத்தால் வனஜீவராசிகளின் வாழ்விடத்திற்கு மேலும் இழப்பு ஏற்படுத்தப்படும் என்பதுடன் இப்பிரச்சினையையும் மோசமாக்கும். வடமத்திய மாகாணமானது குறைந்த இயற்கை நீர் வளங்களைக் கொண்டுள்ள நீர்ப்பற்றாக்குறையை சந்தித்து வருகிறது. இப்பாரிய சூரிய வலுச்சக்தி தகடு ஆனது நீரின் பாவனையை தேவைப்படுத்தப்படுவதாலும் இது நீர் மாசை ஏற்படுத்தும் என்பதாலும் ஒரு பிணக்கு ஏற்படலாம். வடமத்திய மாகாண மக்கள் தமது வாழ்வாதாரத்திற்கும் தொழிலிற்கும் பிரதானமாக விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்." இந்த அறிக்கையானது பின்வருமாறு முடிவுறுகிறது. "நிலைபேண்தகு வலுச்சக்தி கொள்கைக்கு தேவையான சூரிய வலுச்சக்தியை நடைமுறைப்படுத்தும் போது அரசாங்கமானது இது பாதகமான சுற்றாடல் மற்றும் சமூக விளைவுகளை ஏற்படுத்தாது என்பதை உறுதி செய்ய வேண்டும்."

இப்பிண்ணனியில் புமியின் சட்டமுறைமை மற்றும் சர்வதேச சுற்றாடல் சட்ட கடப்பாடுகள் என்பன இலங்கையை ஒத்தன எனவும், கிறீன் எனெர்ஜி லிமிட்டட் இன் சூரிய வலுச்சக்தி திட்டத்திற்கான சட்ட ஆலோசகர் நீர் என்றும் கருதுக. கிறீன் ஸ் த கலரின் (Green is the color) அறிக்கையை கருத்தில் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட முன்னர் பூர்த்தி செய்யப்படவேண்டிய தேவையான சட்ட தராதரங்கள் குறித்து வழிகாட்டி அறிவுறுத்துக. உமது விடையானது பொருத்தமான சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பனவற்றால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

**(25 புள்ளிகள்)**

3. "களனி நதி... நாட்டின் இரண்டாவது பெரிய நீர் நிலை என்பதுடன் நதியின் அண்மை பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் சடுதியான அபிவிருத்தி காரணமாக அதிகம் மாசடைந்ததுள்ளதுடன், இது மிக சனத்தொகை கொண்ட தலைநகரினூடு பயணிக்கிறது. ... களனி நதியின் நீர் தரத்தின் தராதரத்தை சோதிக்கும் போது அதன் நீர் மாசின் மோசமான நிலை தெளிவாக தெரிகிறது. இந்நீர் கொழும்பின் நீரின் பெரும்பான்மையான குழாய் மூலமான குடிநீர் விநியோகத்திற்கான தேவையை பூர்த்தி செய்கிறது."

*Water Quality in Kalani River Introduction, Official Website of Central Environmental Authority, www.cea.lk*

சுற்றாடல் அமைச்சின் கீழ் "இலங்கையில் சுற்றாடல் அபிவிருத்தி – செயற்றிட்டம்" என்பதற்கான ஆராய்வுக்குழுவின் உறுப்பினர் ஒருவர் நீர் எனக் கருதுக. நடைமுறையில் உள்ள "இலங்கையில் நீர் மாசு" தொடர்பில் அறிக்கை ஒன்றை எழுதுமாறு நீர் தேவைப்படுத்தப்பட்டுள்ளீர்.

உமது அறிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும் ;

- சுற்றாடல் பிரச்சினைக்கான அறிமுகம்
- நீர் மாசை எடுத்துரைப்பதற்கும் தணிப்பதற்கும் இலங்கைக்கு உள்ள உள்நாட்டு மற்றும் சர்வதேச கடப்பாடு
- அதிகரித்து வரும் நீர் மாசை தடைசெய்வதற்கு நாட்டில் நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடு தோல்வியுறுவது ஏன் என்பதற்கான காரணங்களும், இலங்கையில் நீர் தரப் பாதுகாப்பிற்கான வினைத்திறனான செயற்படுத்தலுக்கான பரிந்துரைகள்

**(25 புள்ளிகள்)**

4. பின்வரும் கூற்றுக்களின் வலிதான தன்மையை பொருத்தமான சட்ட எடுத்துக்காட்டுக்களுடன் நுணுக்கமாக ஆராய்க.

(அ)'*Silent Spring*' இல் இருந்து 'காலநிலை மாற்றத்தை எடுத்துரைப்பதற்கான சர்வதேச முயற்சிகள்' வரை சர்வதேச சுற்றாடல் சட்டத்தின் அபிவிருத்தியானது நிலைபேண்தகு அபிவிருத்தியின் இனங்காணலை உள்ளடக்கியுள்ளது

**(15 புள்ளிகள்)**

(ஆ)சுற்றாடல் பாதுகாப்பு குறித்து நோக்குவதற்கு பல்வேறு அரச நிறுவனங்கள் இருந்த போதும் சுற்றாடலை பாதுகாத்தல், பேணுதல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சிறப்பான பங்கு ஒன்று காணப்படுகிறது.

**(10 புள்ளிகள்)**

5. "சர்வதேச சுற்றாடல் சட்டத்தின் சடுதியான அபிவிருத்தியானது இன்று உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் இனங்காணப்பட்டு, பிரயோகிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல கொள்கைகளையும் கோட்பாடுகளையும் தோற்றுவித்துள்ளது..."

*Principals and Concepts of Environmental Law, Session 2, Environmental Law Course material, Block 1 pg 17*

மேற்குறிப்பிட்ட கூற்றின் அடிப்படையில் சமூகத்தை பாதிக்கும் சமூகப் பொருளாதார விளைவுகளை பிரதிபலித்து சுற்றாடல் பாதுகாப்பு என்பதற்கான பரந்த பொருளை பொருட்கோடல் செய்வதற்கு வேறுபட்ட நாடுகளின் நீதிமன்றங்கள் எவ்வாறு சுற்றாடல் சட்டத்தின் கோட்பாடுகளை இனங்கண்டு பிரயோகித்துள்ளன என ஆராய்க. உமது விடையானது கீழ்தரப்பட்டுள்ள சுற்றாடல் சட்டத்தின் கோட்பாடுகளுள் எவையேனும் இரண்டின் (02) மீதான நுணுக்கமான ஆராய்வு ஒன்றை கொண்டிருக்க வேண்டும்.

அ. முற்காப்பு கோட்பாடு (Precautionary Principle)

ஆ. மாசிழைத்தவரே சேதத்தை செலுத்த வேண்டும் (Polluter Pays Principle)

இ. பொதுநம்பிக்கைக் கோட்பாடு (Public Trust Doctrine)

**(25 புள்ளிகள்)**

6. பின்வரும் சந்தர்ப்பங்களில் எடுத்து நோக்கப்படக் கூடிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சட்ட ஏற்பாடுகளை இனங்கண்டு சுருக்கமாக ஆராய்க ;

அ. செவான் டுபே எனும் இலங்கை பிரஜை சொந்தமாகக் கொண்டிருந்த கப்பல் ஒன்று கடலின் இயற்கை வளங்களை பாதிக்கும் வண்ணம் நாட்டின் நீர் நிலைக்குள் மேலதிக எண்ணெய்யை வெளியகற்றியது.

**(10 புள்ளிகள்)**

ஆ. சுற்றுலாப் பயணிகளின் வழிகாட்டி ஒருவனான பியல் என்பவன் நாட்டின் மிக பிரபலமான இயற்கை வனமொன்றுக்கு வனவிலங்குகளை புகைப்படமெடுப்பதற்காக அவற்றை கவர வேண்டி நாய் ஒன்றை எடுத்துச் சென்றான்.

**(05 புள்ளிகள்)**

இ. நாட்டின் கிழக்குப் பாகத்தில் முன்மொழியப்பட்டுள்ள ஒரு அபிவிருத்தித் திட்டமானது தொல்பொருளியல் மீது சாத்தியமுள்ள பாதகமான விளைவு ஒன்றை ஏற்படுத்துகிறது. தொல்பொருளியலின் பணிப்பாளர் இவ் அபிவிருத்தித்திட்டத்தை எவ்வித மதிப்பீடும் மேற்கொள்ளாமல் அங்கீகரித்துள்ளார்.

**(10 புள்ளிகள்)**

7. சமகிபுர என்பது 50 குடும்பங்கள் உள்ள குடியிருப்பு ஆகும். சமகி புரவின் குடிவாசிகள் சமகிபுரவின் சூழலில் மாநகர சபையானது குப்பைகளை கொட்டுவதாக குற்றம் சாட்டுகிறது. இது காகங்களையும் பிற விலங்குகளையும் அங்கு அதிகரித்துள்ளதுடன், துர்நாற்றத்தையும் ஏற்படுத்தியது. சமகிபுரவின் சிறுவர்களும் வயது முதிர்ந்தோரும் சுகவீனமுற்றனர். தமது பகுதியில் குப்பை கொட்டுதல் குறித்து குடிவாசிகள் பாதக விளைவுகளைக் கூறி மாநகரசபையிடம் முறையிட்ட போது மாநகர சபையானது பின்வரும் வாதங்களை எடுத்துரைத்து, அதனால் எவ்வித மேலதிக நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது எனத் தெரிவித்தது.

- மாநகரசபைக்கு குப்பைகளைக் கொட்டுவதற்கு கிடைக்கத்தகு ஒரே பகுதி இதுவாகும்.
- குப்பைகளை சுத்தமுடன் கொட்டுவதற்கான முறைகளை மாநகர சபை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மாநகரசபைக்கு குப்பைகளை சேகரிப்பதற்கான பதிலீட்டு முறைகளை நோக்குவதற்கான பணம் தொடர்பில் காணப்படும் சிரமங்கள்.
- 50 குடும்பங்கள் இருக்கக்கூடிய இக்குறித்த பகுதியில் இருந்து குப்பை கொட்டுதல் தொடர்பில் முறைப்பாடு எழுந்த போதும், அப்பகுதியில் உள்ள வேலை செய்யும் வர்க்கத்தின் தொழில் மூலமான சில தொழிற்சாலைகளதும் அப்பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்களினதும் குப்பைகளை அகற்றுவதற்கு கிடைக்கத்தகு ஒரே வழி இதுவாகும்.

சமகிபுர குடிவாசிகளுக்கு பொருத்தமான சட்ட உதாரணங்களுடன் அறிவுறுத்துக.

**(25 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமை பெற்றது -